2017 ஜூலை 14]

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) சென்னை, அண்ணாசாலை, தேனாம்பேட்டை காவல் நிலையத்தின்மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று அதிகாலையில், சென்னையிலுள்ள ஒரு முக்கியமான, பிரதான சாலையான அண்ணா சாலையில் இருக்கக்கூடிய தேனாம்பேட்டை காவல் நிலையத்தின்மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டிருக்கிறது. அதனால், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய, அந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய மக்கள் பீதிக்கு ஆளாகியிருக்கிறார்கள். சட்டம்-ஒழுங்கைக் கட்டுப்படுத்தக்கூடிய காவல் நிலையத்தின்மீதே பெட்ரோல் குண்டு வீசப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே, இந்த அவையில் பேசுகின்றபோதே குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்றேன். காவல் நிலையங்களில் C.C.T.V. கேமராக்கள் பொருத்துவது பற்றி, உயர் நீதிமன்றத்தில் அளித்திருக்கக்கூடிய வாக்குறுதியை உடனடியாக இந்த அரசு நிறைவேற்றிட வேண்டுமென்று, நான் இந்த அவையில் பேசி, அது பதிவாகியிருக்கின்றது. ஆனால், தேனாம்பேட்டையில் நேற்றையதினம் காவல் நிலையத்தில் மூன்று பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன. காவல் நிலையங்களில் C.C.T.V. கேமராக்களை உடனடியாக வைக்க வேண்டியதன் அவசியத்தை இது எடுத்துக்காட்டுகிறது.*

அதுமட்டுமல்ல; காவல் நிலையங்களில் வைக்கப்பட்டிருக்கக் கூடிய C.C.T.V. கேமராக்கள் முறையான வகையில் பராமரிக்கப்படவில்லை. ஆகவே, அதைப் பராமரிப்பது மிக மிக அவசியமான ஒன்றாக இருக்கின்றது. அதிலும் குறிப்பாக தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் இருக்கக்கூடிய C.C.T.V. கேமரா ஒழுங்காக வேலை செய்யவில்லை என்பதும் செய்தியாக வெளியில் வந்திருக்கின்றது. அதிலும் உதவி போலீஸ் கமிஷனர் அலுவலகம் இருக்கக்கூடிய காவல் நிலைய வளாகம் அது.

அந்தக் காவல் நிலையத்திற்கே இந்த நிலை என்று சொன்னால், எப்படி நம்பிக்கையோடு மக்கள் அந்தக் காவல் நிலையத்திற்குச் சென்று புகார்களைக் கொடுக்க முன்வருவார்கள்? எனவே, காவல் நிலையங்களில் இருக்கக்கூடிய கேமராக்களின் நிலையே இப்படியென்றால், சென்னையில் உள்ள மற்ற இடங்களில் இருக்கக்கூடிய கேமராக்கள் என்ன நிலையில் இருக்கும் என்பதும் ஒரு கேள்விக் குறியாக இருக்கின்றது. அறிவியல்ரீதியிலான விசாரணைக்கு மிகவும் பயனளிக்கக்கூடியது C.C.T.V. கேமராக்கள். எனவே, அதனைச் சரியாகப் பராமரிக்க வேண்டும். எனவே, இதுபோன்ற நிகழ்வுகளால் சென்னை மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய அச்சத்தைப் போக்கக்கூடிய வகையிலே, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்களும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார். சுருக்கமாகச் சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே விளக்கமாகச் சொல்லிவிட்டார். நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனாம்பேட்டை காவல் நிலையத்தின்மீது மூன்று குண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன. இதை ஏன் நான் சொல்ல விரும்புகிறேன் என்றால், என்னுடைய வீடும் அதன் அருகில் இருக்கின்றது. (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே, இதுபோன்ற நிகழ்வுகள் தொடரக் கூடாது. இன்றைக்கு நவீன முறையில் நாம் எவ்வளவுதான் முன்னேறினாலும், அதைவிட நவீன முறையில் திருடர்களும் இதுபோன்ற அராஜக செயல்களில் ஈடுபடுகிறவர்களும் நவீன முறையைக் கையாள்கிறார்கள். நீங்கள் எவ்வளவு கேமராக்களைப் பொருத்தினாலும், அந்தக் கேமராவிலிருந்து எவ்வாறு தப்பிப்பது என்பதும் அவர்களுக்குத் தெரிகிறது. தயவுசெய்து, சென்னை நகரைப் பொறுத்தமட்டில் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும். பல இடங்களிலே, பல அசம்பாவிதச் செயல்கள் தொடர்ந்து நடக்கின்றன. இதைத் தடுப்பதற்கு நம்முடைய அரசு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்ற நிலையைத் தங்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

2017 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று வியாழக்கிழமை 13–7–2017 அதிகாலை 4–10 மணிக்கு சென்னை, அண்ணா சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்ற, அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் தேனாம்பேட்டை காவல் நிலைய வளாகத்திற்குள், மண்ணெண்ணெய் நிரப்பப்பட்ட மதுபாட்டில் ஒன்றை, எரியூட்டிய நிலையில் வீசி விட்டுச் சென்றுள்ளனர். அந்த பாட்டில் காவல் நிலைய வாசலில் விழுந்து, உடைந்து எரிந்துள்ளது. இதனைப் பார்த்த அந்நிலைய பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர் உடனடியாக தீயை அணைத்துள்ளார். யாருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. சேதம் எதுவுமில்லை. தகவல் அறிந்த சென்னை மாநகர காவல் ஆணையாளர் தேனாம்பேட்டை காவல் நிலையத்திற்கு உடனடியாகச் சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டார்.*

காவல் துறையினர் இச்சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்து, சம்பந்தப்பட்ட நபர்களை அடையாளம் கண்டு, அவர்களைப் பிடித்து கைது செய்ய தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த வழக்கு தொடர்பாக தனிப் படைகள் அமைக்கப்பட்டு, தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், அப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்களின் CCTV *பதிவுகளை பார்வையிட்டு, குறிப்பிட்ட நேரத்தில் அவ்வழியாகச் சென்றவர்கள் குறித்து பதிவுகளை எடுத்து ஆய்வு செய்து வருகின்றனர். மேலும், சந்தேகப்படும்படியான 12 நபர்களைப் பிடித்து விசாரித்து வருகிறார்கள். அவர்களுள் தேனாம்பேட்டையைச் சேர்ந்த ஒரு நபரின் அடையாளம்,* CCTV *கேமராவின் பதிவு ஒன்றோடு ஒத்துப்போவதால், அவரிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 'கேமராக்களெல்லாம் சரியாக இயங்கவில்லை' என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் 10 கேமராக்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. மழைக் காலங்களில், சாலைகளில் இருக்கின்ற தூசிகளெல்லாம் சில நேரங்களில் கேமராக்களில் படிந்துவிடுகின்றன. உங்களுக்குத் தெரியும், சென்னையில் கிட்டத்தட்ட இந்த வாரத்தில் தினந்தோறும்*

மழை பெய்து கொண்டிருக்கிறது. ஆகவே, முழுமையாக, தெளிவாக உருவங்கள் தெரியவில்லை. இருந்தாலும், அந்த நபர்களை விரைவாகக் கண்டுபிடிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

முற்பகல் 11–20

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், இப்படிப்பட்ட சம்பவம் சென்னை மாநகரத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று. அவ்வாறெல்லாம் அல்ல. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், காவல் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு, மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு பேணிக் காக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) NITI Aayog அமைப்பு, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் கடைசி இடத்தில் இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், தொழில் செய்வதற்கும் ஏற்ற மாநிலங்கள் குறித்த ஆய்வினை* NITI Aayog *என்ற அமைப்பு செய்து கொண்டிருக்கிறது. இந்த அமைப்பின் சார்பில் நடைபெற்ற அனைத்து மாநில தலைமைச் செயலாளர்கள் கூட்டத்தில், மாநிலங்களில் தொழிற்சாலைகள் உருவாகவும், தொழில் தொடங்குவதற்கு இருக்கக்கூடிய நிலைமை குறித்தும் இரண்டு நாட்களுக்கு முன்பு ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய,* NITI Aayog *நிறுவனத்தினுடைய முதன்மை தலைமை அதிகாரி, "தொழில் முதலீடுகளை செய்வதற்கும், தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கும் ஏற்ற மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு கடைசி இடத்தைப் பிடித்துள்ளது" என்று அறிவித்திருக்கிறார். இன்றையதினம்கூட பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருக்கிறது.* Madras Chamber of Commerce and